திரு. கூத்தகுடி ச. சண்முகம் : தலைவரவர்களே, சென்னையிலே உள்ள அண்ணா, பெரியார் ஆகியோர்களுடைய சிலைகளின் எண்ணிக்கை என்ன ? எத்தனை சிலைகளை அலங்கரித்திருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : பேரவைத் தலைவரவர்களே, சென்னையிலே அண்ணா சிலை ஒன்று, பெரியார் சிலை இரண்டு அலங்கரிக்கப்பட்டிருக்கின்றன.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, சென்னையிலே உள்ள சிலைகளைப்பற்றித்தான் மூலக் கேள்வி வந்திருக்கிறது என்று அமைச்சரின் பேரவைச் செயலர் அவர்கள் இங்கே அறிவித்தார்கள். மாநிலம் பூராவும் எத்தனை சிலைகள், தந்தை பெரியார், அண்ணா சிலைகள், பெருந்தலைவர் காமராஜர் சிலைகள் இருக்கின்றன என்ற கேள்வியை எழுப்பி இருக்கிறேன். அந்தக் கேள்வியே வரவில்லையே, அதற்கான விளக்கத்தை அமைச்சரின் பேரவைச் செயலர் அறிவிப்பார்களா ?

(விடை இல்லை).

Government servants' Family Pension

*Q. No. 2 : Thiru Salem M. ARUMUGAM : Will the Hon. the Minister for finance be pleased to state :

(a) whether the age limit for the receipt of FamilyPension by daughters and sons of deceased State Government Officers have been raised: and

(b) if so, the details thereof?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) :

(அ) ஆம்.

(இ) இறந்து விட்ட அரசுப் பணியாளரின் திருமணமாகாத மகள் 24 வயது வரையிலும் திருமணமாகாத மகன் 21 வயது வரையிலும் குடும்ப ஒய்வூதியம் பெறலாமென்று இப்போது வரையறுக்கப்பட்டுள்ளது.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : பேரவைத் தலைவரவர்களே, இதற்கு முன்னாலிருந்து ஒய்வு ஊதிய வயது வரம்பு என்ன ? தற்பொழுதுள்ள வயது வரம்பு எப்பொழுதிலிருந்து அமுலாகும் ?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : பேரவைத் தலைவரவர்களே, இப்போது வரையறுக்கப்பட்டுள்ள, 24 வயது, 21 வயது வரையறுக்கப்பட்டுள்ள, இந்த உத்தரவு

7–12–1978— ஆம் நாள் அன்றோ அதற்குப் பின்னரோ ஓய்வு பெற்றவர்களுக்குப் பொருந்தும். இதற்கு முன்னால் இறந்து விட்ட அரசுப் பணியாளரின் திருமணமாகாத மகளுக்கு 21 வயது வரையிலும் திருமணமாகாத மகனுக்கு 18 வயது வரையிலும் இதுவரை குடும்ப ஓய்வு ஊதியம் வழங்கப்பட்டது.

டாக்டர் கே. சமரசம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த குடும்ப ஓய்வூதியம் எப்படிக் கணக்கிடப்படுகிறது என்பதை அறிவிக்க இயலுமா?

திரு. எம். வின்சென்ட்:—(அமைச்சரின் பேரவைச் செயலர்): 1–4–1979-க்கு முன் இறந்தவரின் சம்பளம் 200 ரூபாய்க்குக் கீழ் இருந்தால், சம்பளத்தில் 30 சத விகிதம், குறைந்தபட்சம் ரூ. 50, ரூ. 200-க்கு மேல் ரூ. 800-க்குள் இருந்தால், 15 சத விகிதம், குறைந்தபட்சம் ரூ. 60, ரூ. 800-க்கு மேல் இருந்தால் 12 சத விகிதம், குறைந்தபட்சம் ரூ. 120 அதிக பட்சம் ரூ. 300. 1–4–1979-க்குப் பின்னால், அலுவலர் இறக்கும்போது பெற்ற சம்பளத்தில் 30 சத விகிதம், குறைந்த பட்சம் 50 ரூபாயாக இருந்தது ரூ. 100 ஆக ஆக்கப்பட்டது. அதிக பட்சம் ரூ. 300—ஆக இருந்தது ரூ. 500—ஆக ஆக்கப்பட்டது.

திரு. ஆர். சி. சுப்பிரமணியம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு எவ்வளவு தொகை ஓய்வூதியமாக வழங்கப்படுகிறது? எத்தனை பேர் ஓய்வூதியம் பெறுகிறார்கள்?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்): ரூ. 30,17,65,000 பென்ஷனாக வழங்கப்படுகிறது. சுமார் 90,000 பேர் ஓய்வூதியம் பெறுகிறார்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன்: சார், ஆண்-பெண் சமத்துவம் பற்றிப் பேசுகிறோம். சம வேலைக்கு சம ஊதியம் கொடுக்க வேண்டும் என்று மத்திய அரசின் சட்டம் இருகிறது. அப்படி இருக்கும்போது, இதில் மட்டும் ஆண் என்றால் ஒரு வயது, பெண் என்றால் ஒரு வயது வரம்பு என்று பாகுபாடு வைத்து இருக்கும் நோக்கம் என்ன? ஒரே வயது வரம்பு வைக்க ஏற்பாடு செய்யப்படுமா?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்): மாண்புமிகு உறுப்பினர் நாடாளுமன்றத்திற்குச் சென்று இந்தக் கேள்வியை எழுப்ப வேண்டும்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, அரசுப் பணியாளர்களின் குழந்தைகள்-மகள் என்றால் 24 வயது என்றும், மகன் என்றால் 21 வயது என்றும் வரம்பு வைத்துள்ளதாக

1979 அக்டோபர் 27]

அமைச்சர் செயலர் சொன்னார்கள். பெண்கள் வயது வரம்பு என்று பார்க்கிறபோது, வரதட்சணை போன்ற கொடுமைகள் காரணமாக 24 வயதுக்கு மேலும் கல்யாணம் ஆகாமல் பெண் கள் இருக்கிறார்கள். அப்படி இருந்தால், அந்தக் குடும்பத் திற்கு வேறு வருமானம் இருக்காது. ஆகவே, பெண்ணுக்கு வேறு வகையில் உத்யோகம் செய்து வருமானம் கிடைக்கும் வரையிலும், அல்லது கல்யாணம் ஆகிற வரைக்கும் என்கிற முறையில் விதிகளைத் திருத்த அரசு முன் வருமா ?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : தற்போது அந்த உத்தேசம் இல்லை.

திருப்பத்தூரில் கூட்டுறவு இணைப் பதிவாளர் அலுவலகம்.

* வினா எண். 3— திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா :

வட ஆற்காடு மாவட்டம் ஆம்பூரில் உள்ள கூட்டுறவு இணைப் பதிவாளர் அலுவலகத்தைத் திருப்பத்தூருக்கு மாற்றும் எண்ணம் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : வட ஆற்காடு மாவட்டம் ஆம்பூரில் இருந்த கூட்டுறவு இணைப் பதிவாளர் அலுவலகம் திருப்பத்தூருக்கு 1—6—79 முதல் மாற்றப்பட்டு விட்டது.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவர் அவர்களே, ஆம்பூரில் இருந்த கூட்டுறவுத் துறை அலுவலகத்தைத் திருப்பத்தூருக்கு மாற்றியதற்கான அடிப்படை என்ன ? ஒரு ஊரில் அரசு அலுவலகம் இருக்க வேண்டும் என்று வேண்டிப் பெற்று, அங்கே இயங்கி வந்த அலுவலகத்தை திருப்பத்தூருக்கு மாற்றியிருப்ப தால், ஆம்பூரில் உள்ள மக்கள் கொதிப்படைந்து இருப்பது அரசுக்குத் தெரியுமா ? அதை மீண்டும் ஆம்பூருக்குக் கொண்டு வர அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, திருப்பத்தூர் நகரில் கருவூலம் இருக்கிற காரணத்தாலும், அங்கேயிருக்கிற மக்கள் விரும்பிக் கேட்ட தாலும், அந்த அலுவலகம் அங்கே மாற்றப்பட்டு இருக்கிறது.